**தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்குகளின் மீதி இருப்பு மற்றும் ஒதுக்கீட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டு புதிய ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக புதிய கணக்கீட்டு நியமத்தின் கீழ் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2019 இற்குரிய சரிசெய்தல்கள் 2021 இன் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 476,491 பெறுமதியான | பெறுமதிகளை கணிப்பிட்டு 2021 ஆம் ஆண்டின் | சரியாக கணக்கீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதிடன் காண்பிக்கப்பட்டு நூலக புத்தகங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | போது கணக்கீடு செய்யப்படுமென அறியத் தருகின்றோம். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வருடாந்த பெறுமானத்தேய்வு சரியாக சீராக்கப்படாமையால் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு பிழையாக இருந்தது. | 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான மூலதன மானியமாக ரூபா 7,633,946 தொகையை வழங்குவதற்காக 05 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் அந்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு கிடைக்க வேண்டிய பணமாக ரூபா 6,984,823 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது விரிவான வருமானக் கூற்றின் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன மானியமாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2020 இன் கணக்குகள் தயாரிக்கின்ற காலத்தில் கொரோனா தொற்று நோய் நிலைமையினால் இந்த செயற்திட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட செலவினங்ளை இனங்காண்பதற்கு முடியாமையினால் இந்த தவறு ஏற்பட்டிருந்தது. 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது தகவல்களை பெற்று ஆராய்ந்து சரியாக கணக்குகள் வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் கழிவுப் பொருள்கள் அகற்றுவதற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த பணம் ரூபா 36,784,996 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த செலவினம் ரூபா 39,157,178 ஆனமையால் செலவினம் ரூபா 2,372,182 தொகை நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் தயாரிக்கும் வரையிலும் விலை பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் அதிகரித்து கடன்கொடுத்தோர் ஒதுக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் சரியாக கணக்கீடு செய்யப்படுமென அறியத் தருகின்றோம். | ஆண்டின் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் பாதுகாப்பு சேவை செலவினம் ரூபா 1,750,924 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் தயாரிக்கும் வரையிலும் விலை பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் அதிகரித்து கடன்கொடுத்தோர் ஒதுக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் சரியாக கணக்கீடு செய்யப்படுமென அறியத் தருகின்றோம். | ஆண்டின் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 355,747,136 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 284,365,691 ஆகும்.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி | | |
| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி அறவிட முடியுமான ஆதனம் 86000 அளவில் காணப்பட்டதுடன், அதில் 42622 ஆதனங்களில் ரூபா 430,760,901 ஆதன வரி நிலுவையொன்று காணப்பட்டது. | கொவிட் 19 முதலாவது மற்றும் இரண்டாவது அலைகள் பரவலடைந்ததன் அடிப்படையில் மீண்டும் நாடு மூடப்பட்டமையின் காரணமாக வியாபார நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையினால் ஆதனவரி செலுத்துதல் கவனத்தில் கூடிய மட்டத்தில் குறைவடைந்திருந்தது. மேலும் இதன் காரணமாக வியாபாரங்களின் நிலுவை ஆதனவரி ரூபா 100,000 தொகையை விஞ்சிய நிலுவை ஆதனங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) கழிவுப்பொருள் வரி

| | | |
|---|---|---|
| சபையினால் கழிவுப்பொருள் அகற்றப்படுகின்ற வியாபார நிலையங்களுடன் உடன்படிக்கை செய்யப்படாதிருந்தமையினால் நிலுவை கழிவுப் பொருள் வரியை அறவிடும் போது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே 2003 நவம்பர் 18 ஆந் திகதிய 08(10)35 ஆம் இலக்க சபைத் தீர்மானம் மற்றும் நிதிக் செயற்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் நிலுவை கழிவுப்பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கழிவுப்பொருள் வரி வருமானம் ரூபா 17,079,650 ஆக காணப்பட்டது. | அறவிட வேண்டிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக நிலுவைக் கட்டண கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் உரிய பிரிவுகளுக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் சுகாதார கண்காணிப்பாளர் ஊடாக ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கட்டணம் செலுத்தும் வரை சேவை வழங்குதலும் நிறுத்தப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) ஏனைய வரிகள்

| | | |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கேபிள் ரீவி வருமானம் ரூபா 4,718,601 தொகை, அறிவித்தல் பதாதை நிலுவை மீதி ரூபா 9,960,842 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) கடை வாடகை

| | | |
|---|---|---|
| i. இரத்மலானை புதிய சிறிய கடைகள் மற்றும் இரத்மலான பழைய பெரிய கடைகள் இதுவரையிலும் வேறு இடமொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய முன்னைய வருடத்திற்கான நிலுவைப் பணம் ரூபா 6,968,247 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரத்மலானை புதிய சிறிய மற்றும் பழைய பெரிய கடைகளிலிருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | முத்திரை வைக்கப்பட்டுள்ள கடைகளுக்கு மேலதிகமாக 40 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் போது எந்தவொரு வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பௌதீக குறைபாடுகளின் காரணமாக அல்லது வாடகையை அதிகரித்தல் தொடர்பாக வாடகையாளர்களினால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் பழுதுபார்க்க முடியுமாயின் உடன்படிக்கை செய்து பழுதுபார்த்தல் மேற்கொள்ளுதல் பயனுள்ளதாக இருந்தமையினால் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்வதற்கு சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஆதன வாடகை<br>---------------------------<br>2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 ஆதனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை ஆதனங்களின் வாடகை ரூபா 5,778,407 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினால் தாமதடைந்திருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அனுமதிப்பத்திரக் கட்டணம்<br>-----------------------------------------------<br>பதிவேட்டின் படி 2020 ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடவடிக்கைகளில் 1793 கடைகள் காணப்படுகின்றமை காண்பிக்கப்பட்ட போதிலும் 500 விற்பனைக் கடைகளுக்காக மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 1293 விற்பனை கடைகள் அனுமதிப் பத்திரம் பெறாமல் அதாவது அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தாமல் வியாபாரக் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கைத்தொழில் வரிக்கான கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் அவை அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய நிலையமாக பட்டியல் படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டின் போது வர்த்தமானி பத்திரம் சரிசெய்யப்பட்டுள்ளது. கட்டணம் அறவிடுதல் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்படும். | அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது வியாபார கடைகளை இனங்கண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நீதிமன்ற தண்டப்பணக் கட்டணம்<br>------------------------------------------------<br>2016 ஆம் ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்ட தண்டப் பணத்தின் பெறுமதி ரூபா 84,140,132 ஆக இருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் போதும் உரிய நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப் பணத்துக்கான பட்டோலைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் பட்டோலைகள் தயாரிக்கப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டிற்குரிய பட்டோலைகளை தயாரிப்பதற்கு கொவிட் 19 தொற்று நோயின் இடையில் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முடியாத நிலையில் உள்ளது. | வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்துக்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,563,042 தொகை அறவிடுவதற்கு காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மிகைக் கட்டண மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 நவம்பர் 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட ரூபா 145,470 ஆதனவரி நிதிரீதியான மோசடி தொடர்பான நட்டத்தை அறவிடுவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | முறையான ஒழுக்காற்று பரிசோதனைக்குரிய விசாரணை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டில் காணப்படுகின்ற குழப்ப நிலையின் பிரகாரம் அந்த | விசாரணை நடவடிக்கைகளை தாமதமின்றி பூர்த்தி செய்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வில்லை. | விசாரணைகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அநகாரிக தர்மபால மாவத்தையில் இலக்கம் 14 என்ற இடத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை நீர்க் கட்டண பட்டியலுக்காக ரூபா 87,844 தொகை 2016 செப்தெம்பர் 05 ஆந் திகதி சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிலுவை நீர்க்கட்டண பட்டியல் அந்தக் காலத்தில் வீட்டில் குடியிருந்த உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுமாறு 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தில் காண்பிக்கப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இதற்காக முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று நடாத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக ஒழுக்காற்று அதிகாரத் தரப்பான உள்ளூராட்சி ஆணையாளருக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 25,751,793 செலவில் தெஹிவளை நாற்சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட 25 கடைகள் வாடகையாளர்களுக்கு வழங்கும் போது மீளாய்வாண்டில் வாடகை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சாரம் மற்றும் நீர் இணைப்புக்கள் ஒவ்வொரு கடைகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படாதிருந்த மையால் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இணைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்கிஸ்ஸ ஹொட்டல் வீதி இலக்கம் 4/89 ஆம் இலக்க நில வரைபடத்தில் 01 றூட் 4.10 பேர்ச் அளவான காணி வாகனங்கள் நிறுத்துமிடமாக | பல வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை 2020.05.31 ஆந் திகதி உடன்படிக்கை காலம் முடிவடைந்ததாக | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு விரைவுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்துவதற்காக கல்கிஸ்ஸ ஹோட்டலுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மாநகர சபைக்குச் சொந்தமான இந்த ஆதனத்தை வாடகைக்கு வழங்கும் போது இதன் உடன்படிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த ஆதனத்தின் நிலுவை வாடகை ரூபா 4,636,516 ஆக இருந்ததுடன் அந்த வாடகைப் பணத்தை வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கல்கிஸ்ஸ ஹோட்டலுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் புதிய மதிப்பீட்டுப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகின்றது. | |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெஹிவளை எஸ். த ஜயசிங்க விளையாட்டு மைதானத்தில் விளையாட்டரங்கை நிர்மாணிக்கும் போது ஒப்பந்தக் கம்பனிக்கு ரூபா 20,784,031 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் செய்யப்பட்ட வேலையின் அளவிற்குரிய கொடுப்பனவு விபரங்கள் மற்றும் அளவிடல் அறிக்கைகள் ஆலோசனை நிறுவனத்தினால் சபைக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | உருவாகியிருந்த கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக 2020.03.16 முதல் 2020.06.08 வரையான காலத்தில் நாட்டில் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருந்தமையினால் அரசாங்க நிறுவனங்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியீனமாக இருந்தது. பிரதான சட்ட உத்தியோகத்தரினதும் ஆலோசனையை பெற்று செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்காக கலந்துரையாடப்படுகின்றது | செயற்திட்டத்தின் வேலைகளை தாமதமின்றி பூர்த்தி செய்தல் வேண்டும். |